RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 186 | ஜூலை.9 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# 'மைக் முன் பேசினால் மன்னராக நினைத்துக் கொள்கிறார்கள்' பொன்முடி வழக்கில் ஐகோர்ட் கருத்து



சென்னை: ஜூலை.9-

'மைக் முன் பேசும் ஒவ்வொருவரும் தங்களை நாட்டின் மன்னர்களாக நினைத்துக் கொள்கிறார்கள். இதை ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது. கருத்து சுதந்திரம் என்ற பெயரில் வானமே தங்கள் எல்லை என்ற எண்ணத்தில் அரசியல்வாதிகளின் பேச்சுக்களை நீதிமன்றம் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது' என சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சைவ, வைணவ சமயங்கள் மற்றும் பெண்கள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்ததாக முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

இந்த வழக்கு நீதிபதி வேல்முருகன் முன்பு இன்று (செவ்வாய்க்கிழமை) மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக அரசு தலைமை வழக்கறிஞர் பி எஸ் ராமன், "பாரதிய நியாய சன்ஹிதா சட்டத்தின் படி, புகார்கள் குறித்து ஆரம்ப கட்ட விசாரணை நடத்தி அதில் முகாந்திரம் இல்லை என்று தெரிய வந்தால் புகாரை காவல்துறையினர் முடித்து வைக்கலாம் . இதை எதிர்த்து சம்பந்தப்பட்ட புகார்தாரர்கள் உயர் அதிகாரிகளிடம் மேல் முறையீடு செய்யலாம். இந்த வழக்கை பொறுத்தவரை முன்னாள் அமைச்சருக்கு எதிரான நூற்றுக்கும் மேற்பட்ட புகார்களையும் முடித்து வைக்கப்பட்டது." எனத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து புகார்தாரர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதா என்று நீதிபதி கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த தலைமை வழக்கறிஞர், "புகார்தாரர்களிடம் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் புகார்கள் முடித்து வைக்கப்பட்டிருக்கின்றன." என்று விளக்கம் அளித்தார்.

அதற்கு நீதிபதி, "புகார்தாரர்கள் உயர் அதிகாரிகளிடம் மேல் முறையீடு செய்யட்டும். இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நிலுவையில் இருக்கட்டும்." என்றார்.

தொடர்ந்து நீதிபதி, "இதுபோல பேசும் நபர்களின் வாயை கட்டுப்படுத்த இந்த நீதிமன்றம் விரும்புகிறது. மனுதாரர் மட்டுமல்ல அனைத்து அரசியல்வாதிகளும் கருத்து சுதந்திரம் என்ற பெயரில் வானமே தங்கள் எல்லை என்ற எண்ணத்தில் செயல்படுகிறார்கள். அவர்களின் இதுபோன்ற பேச்சுக்களை நீதிமன்றம் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அரசியல்வாதிகளும் அரசியல் சாசனத்தை பின்பற்ற வேண்டும்.

ஒருவர் பொது வாழ்க்கைக்கு வந்த பிறகு நாம் ஜனநாயக நாட்டில் வசிக்கிறோம் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நாடு அனைத்து குடிமக்களுக்குமானது. சம்பந்தப்பட்ட நபருக்கு மட்டுமானது அல்ல.

ஆரம்பகட்ட விசாரணை என்பது புகாரில் குறிப்பிட்ட சம்பவம் நடந்ததா, இல்லையா? என்பது குறித்து விசாரிப்பது தான். அதன்பிறகு வழக்குப் பதிவு செய்ய வேண்டும். அந்த வழக்கின் முடிவை நீதிமன்றம் தீர்மானிக்கும்.

வேண்டாதவர்களுக்கு எதிராக புகார் வந்தால் அதில் முகாந்திரம் உள்ளதாக கூறும் நிலையில், ஆதரவாளர்கள் என்றால் முகாந்திரம் இல்லை என்று கூறுகிறீர்கள். ஆரம்பகட்ட விசாரணையின் அடிப்படையில் புலன் விசாரணை அதிகாரி தீர்ப்பு எழுத முடியாது.

மைக் முன் பேசும் ஒவ்வொருவரும் தங்களை நாட்டின் மன்னர்களாக நினைத்துக் கொள்கிறார்கள். இதை ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது. பிறரின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்." என்று தெரிவித்தார்.

தொடர்ந்து நீதிபதி, "பொன்முடிக்கு எதிரான புகார்களை முடித்து வைத்து பிறப்பித்த உத்தரவு குறித்து சம்பந்தப்பட்ட புகார்தாரர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் அது தீவிரமாக கருதப்படும்." என்றும் குறிப்பிட்டார். இந்த வழக்கின் விசாரணையை நீதிபதி ஆகஸ்ட் 1ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

# ஜூலை 18ல் ஸ்டாலின் தலைமையில் திமுக எம்.பி.க்கள் கூட்டம்: துரைமுருகன் அறிவிப்பு



சென்னை: ஜூலை.9-

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கவுள்ள நிலையில் அது குறித்து ஆலோசிக்க வரும் 18ம் தேதி அன்று மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக மக்களவை, மாநிலங்களவை எம்.பி.க்கள் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மக்களவை மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், 18.07.2025 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், 'முரசொலி மாறன் வளாகத்தில்' உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

அதுபோது, கழக மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். நடைபெற உள்ள நாடாளுமன்ற கூட்டத் தொடர் குறித்து அந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்." என்று தெரிவித்துள்ளார்.

ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 21 வரை: நாடாளுமன்ற மழைக் கால கூட்டத் தொடர் ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 21 வரை நடைபெறவுள்ளது. சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆகஸ்ட் 13, 14ல் மட்டும் நாடாளுமன்றத்தில் பணிகள் நடைபெறாது என்று நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரிண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

கூட்டத்தொடரை ஆகஸ்ட் 12ம் தேதியுடன் முடிக்க ஏற்கெனவே திட்டமிடப்பட்டது. தற்போது ஆகஸ்ட் 21 வரை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு மாதம் நடைபெறும் இந்த நீண்ட கூட்டத்தொடரில் பல முக்கிய மசோதாக்களை அறிமுகம் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. '

'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கைக்கு பிறகு, முதல்முறையாக நாடாளுமன்றம் கூடுவதால், அந்த நடவடிக்கை குறித்தும், இந்தியா பாகிஸ்தான் போர்நிறுத்தத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் தலையீடு குறித்தும் விவாதம் நடைபெறும் எனத் தெரிகிறது. கூட்டத்தொடர் தொடர்பான அனைத்துக் கட்சி ஆலோசனை கூட்டம் வரும் 19ம் தேதி நடைபெற உள்ளது.

இந்நிலையில், நாடாளுமன்ற கூட்டத்தொடர் குறித்து ஆலோசிக்க திமுக எம்.பி.க்கள் கூட்டம் ஜூலை 18 காலை 10.30 மணியளவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# காவல் மரணம் வழக்குடன் அஜித்குமார் மீதான திருட்டு வழக்கையும் சிபிஐ விசாரிக்க வேண்டும்: ஐகோர்ட்

மதுரை: ஜூலை.9-

மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் மீதான திருட்டு வழக்கையும் சிபிஐ விவிசாரிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் மீது பேராசிரியை நிதிதா நகை திருட்டுப் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அஜித்குமார் தனிப்படை காவலர்கள் தாக்கியதில் உயிரிழந்தார். இதையடுத்து அஜித்குமார் காவல் மரணம் குறித்து கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு தனிப்படை போலீஸார் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் அஜித்குமார் மரணம் தொடர்பான வழக்கு விசாரணையை சிபிஐக்கு மாற்ற வேண்டும், அஜித்குமார் குடும்பத்துக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் பொது நல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை விசாரித்த உயர் நீதிமன்றம், அஜித்குமார் மரணம் தொடர்பாக மதுரை 4வது கூடுதல் அமர்வு மாவட்ட நீதிபதி விசாரணைக்கு உத்தரவிட்டது.

இந்த மனுக்கள் நீதிபதிகள் எம்.எஸ்.சுப்பிரமணியம், ஏ.டி.மரியகிளாட் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. கூடுதல் மாவட்ட நீதிபதி விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அரசு சார்பில் கூடுதல் அட்வகேட் ஜெனரல் அஜ்மல்கான் வாதிடுகையில், 'அஜித்குமார் வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டுள்ளது. அவரது சகோதரருக்கு அரசு வேலை வழங்கப்பட்டுள்ளது. இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டுள்ளது' எனத் தெரிவித்தார்.


மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர்கள் ஹென்றிடிபேன், மாரீஸ்குமார், ஆயிரம் கே.செல்வகுமார், தீரன் திருமுருகன் ஆகியோர் வாதிடுகையில், 'அஜித்குமார் காவல் மரணம் தொடர்பான வழக்கு மட்டுமே சிபிஐக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பேராசிரியை நிகிதா அளித்த புகாரின் பேரில் அஜித்குமார் மீது போலீஸார் நகை திருட்டு வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்த வழக்கின் விசாரணையையும் சிபிஐயிடம் ஒப்படைக்க வேண்டும். அனைத்து சாட்சிகளுக்கும் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும். அஜித்குமார் குடும்பத்துக்கு அரசு சார்பில் இழப்பீடு வழங்கப்படவில்லை. உரிய இழப்பீடு வழங்கவும் உத்தரவிட வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், "மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் காவல் மரணம் வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி அரசு உத்தரவிட்டுள்ளது. சிபிஐ காவல் மரணம் வழக்குடன் அஜித்குமார் மீதான திருட்டு வழக்கையும் சேர்த்து விசாரிக்க வேண்டும். இந்த வழக்குகளை விசாரிக்கும் விசாரணை அதிகாரி மற்றும் விசாரணை குழுவில் இடம் பெறும் சிபிஐ காவலர்களையும் சிபிஐ இயக்குநர் ஒரு வாரத்தில் நியமிக்க வேண்டும். அஜித்குமாரின் முழுமையான பிரேதப் பரிசோதனை அறிக்கையை நீதித்துறை நடுவர் மன்றத்தில் ஒரு வாரத்தில் போலீஸார் தாக்கல் செய்ய வேண்டும்.

சிபிஐ விசாரணை அதிகாரி அஜித்குமார் வழக்கு தொடர்பான மாவட்ட நீதிபதி அறிக்கை மற்றும் அனைத்து ஆவணங்களையும், தடயங்களையும் உயர் நீதிமன்ற பதிவாளர் ஜெனரலிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சிபிஐ விசாரணை அதிகாரி உடனடியாக விசாரணை தொடங்கி ஆக.20க்குள் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும். சிபிஐ விசாரணைக்கு தேவையான அனைத்து வசதிகள் மற்றும் ஒத்துழைப்பை தென் மண்டல ஐஜி, மதுரை, சிவகங்கை மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் வழங்க வேண்டும். வழக்கின் அனைத்து சாட்சிகளுக்கும் சாட்சிகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்." என உத்தரவிட்டனர்.

# திருச்செந்தூரில் திருப்பணிகள் முடியும் முன்பே கும்பாபிஷேக விழா ரூ.300 கோடி திட்டப் பணிகள் இனி?



திருச்செந்தூர், ஜூலை.9-

பெருந்திட்ட வளாகப் பணிகள் முடியும் முன்பே திருச்செந்தூர் கோயிலில் கும்பாபிஷேக விழா நடந்துள்ள நிலையில் ரூ.300 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளை தொய்வின்றி முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று பக்தர்கள் எதிர்பார்க்கின்றனர்.

திருச்செந்தூர் கோயிலில் உண்டி யல் காணிக்கை மூலம் மாதந் தோறும் கோடிக்கணக்கில் வருவாய் கிடைக்கிறது. இவை தவிர அன்ன தானம், கோசாலை பராமரிப்புக்காக தனித்தனியாக வைக்கப்பட்டுள்ள உண்டியல்களிலும் பக்தர்கள் காணிக்கை இடுகின்றனர். மேலும், அன்னதானத்துக்கு நன்கொடை செலுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள பிரத்யேக கவுன்ட்டரிலும் பக்தர்கள் நன்கொடை செலுத்தி ரசீது பெறுகின்றனர். இவற்றின் மூலம் மாதந் தோறும் கோடிக் கணக்கில் வருவாய் வந்த போதும் பக்தர் களுக்கான வசதிகள் முழுமையாக செய்யப்படவில்லை என்பது பெருங்குறையாக இருந்தது.

திருச்செந்தூர் கோயிலில் ஹெச்சிஎல் நிறுவனம் வழங்கிய ரூ.200 கோடியில் பெருந்திட்ட வளாகப் பணிகளை அறநிலையத்துறை மேற்கொண்டுள்ளது. கோயில் நிதி ரூ.100 கோடியில் கோயில் திருப்பணிகள் தனியாக நடைபெற்று, கும்பா பிஷேகம் நேற்று நடைபெற்றுள்ளது. இந்நிலையில், பக்தர்களுக்கான காத்திருப்பு அறை, வரிசை கவுன்ட்டர், முடி காணிக்கை மண்டபம், சுகாதார வளாகம் உள்ளிட்ட பணிகள் மட்டுமே முடிவுற்றுள்ளன. நாழிக்கிணறு அருகே உள்ள பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கான நிழற்கூடம் அமைத் தல், தேவையான இடங்களில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட பல பணிகள் இன்னும் நடைபெறவில்லை.

திருப்பணிகளுக்கு பிற்கு ரூ.100 கட்டண தரிசையில் வரும் பக்தர்கள் கோயிலின் வடக்கு பிரகாரத்தில் உள்ள வாசல் வழியாகவே அனுமதிக்கப்படுகின்றனர். இதற்கான கவுன்ட்டர்கள் நெருக்கமாக உள்ளன. மின்விசிறி கள் அமைக்கப்படாததால் பக்தர்கள் தவிக்கின்றனர். இலவச தரிசனத்துக் கான காத்திருப்பு அறையில் மின்விசிறிகள் உள்ளன. ஆனால், கவுன்ட்டர்களில் மின் விசிறிகள் எதுவும் இல்லை. மூலவரை தரிசனம் செய்த பிறகு பக்தர்கள் வலப்புறமாக சென்று கோயில் பிரகாரத்தில் உள்ள மற்ற தெய்வங்களின் சந்நிதிகளை தரிசிக்க முடியாமல் தடுப்பு போட்டு அடைத்து வைக்கின்றனர்.

பிரதான வழியாகச் சென்று தரிசனம் செய்த பின்னர் அதே வழியாகவே பக்தர்கள் வெளியே வருவதற்கான நடைமுறைக்கு திருச்செந்தூர் கோயிலில் அதிகாரிகள் முட்டுக் கட்டை போடுவது நியாயமா? என பக்தர்கள் கேள்வி எழுப்புகின்றனர். பெருந்திட்ட வளாகப் பணிகள் முடிவடைந்தால் திருப்பதி கோயிலுக்கு இணையாக பக்தர்களுக்கான வசதிகள் கிடைக்கும் என்று அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அடிக்கடி கூறி வருகிறார். இதை நிறைவேற்றும் விதமாக பணிகளை எவ்வித புகாருக்கும் இடமின்றி முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதே பக்தர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பக்தர்கள் கானா பாடகர் வேல்முருகனுடன் சேர்ந்து முருகன் பக்தி பாடல்களை பாடினர்.

வழி தெரியாமல் தவித்த பக்தர்கள்: திருச்செந்தூரில் நாலாபுறமும் வழிகள் மறிக்கப்பட்டதால் கோயிலுக்கு செல்ல வழி தெரியாமல் பக்தர்கள் தவித்தனர். திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில் கும்பாபிஷேக விழாவுக்கு சுமார் 10 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என தெரிவிக்கப் பட்டது. கோயில் வளாகத்தில் யாரையும் அனுமதிக்க கூடாது என்பதற்காக கோயிலை சுற்றி நாலாபுரமும் பேரிகார்டுகள் வைத்து காவல் துறையினரால் மறிக்கப்பட்டது.

இதனால் வெளியூர்களில் இருந்து திருச்செந்தூருக்கு வந்த பக்தர்கள் எந்தவழியாக கோயில் அருகே செல்வது என்பது தெரியாமல் தவித்தனர். இதற்கிடையே, நேற்று காலையில் கோயில் விமான தளத்தில் சுமார் 2,500 பேரும், தரைதளத்தில் ஆயிரக்கணக்கானோரும் எளிதாக வலம் வந்தனர்.

கும்பாபிஷேக விழாவுக்காக அறநிலையத்துறை சார்பில் 310 சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனாலும், கோயில் வளாகத்தில் முக்கிய விஐபிகள், திமுகவினர் உட்பட பலர் எந்த கெடுபிடியும் இன்றி உள்ளே சென்றனர். பத்திரிகையாளர்கள் கோயில் விமான தளத்துக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

பத்திரிகையாளர்கள் ராஜகோபுரம் மற்றும் பரிவார தெய்வங்களின் கும்பாபிஷேகத்தை படம் எடுக்க முடியாதவாறு முடக்கப்பட்டனர். மேலும், பத்திரிகையாளர்களுக்கென பக்தர்கள் வரிசையாக செல்லும் இடத்தின் மேல் பகுதியை ஒதுக்கி இருந்தனர். ஆனால், அங்கு பத்திரிகையாளர்கள் பணி செய்ய முடியாதபடி ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

தேவகோட்டை வட்டம், கண்டதேவி கிராமத்தில், மாவட்ட நிர்வாகம், காவல்துறை, தேவஸ்தானம் மற்றும் பொதுமக்கள் இணைந்து நடத்திய

# அருள்மிகு ஸ்ரீ சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில் தேரோட்டத்தில், அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கலந்து கொண்டு, தேரோட்டத்தினை வடம் பிடித்து தொடங்கி வைத்து சிறப்பித்தார்

சிவகங்கை, ஜூலை.09-

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கண்டதேவி கிராமத்தில், மாவட்ட நிர்வாகம், காவல்துறை, தேவஸ்தானம் மற்றும் பொதுமக்கள் இணைந்து நடத்திய அருள்மிகு ஸ்ரீ சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில் தேரோட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் கலந்து கொண்டு, தேரோட்டத்தினை வடம் பிடித்து தொடங்கி வைத்து சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் காவல்துறை இயக்குனர் ஜெனரல் (சட்டம் - ஒழுங்கு) திரு.டேவிட்சன் தேவாசீர்வாதம்,இ.கா.ப., அவர்கள், காவல்துறை துணை தலைவர் திரு.பா.மூர்த்தி,இ.கா.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் திரு.ஜி.சந்தீஷ் (சிவகங்கை (பொ)), திரு.பி.கே.அர்விந்த்,இ.கா.ப., அவர்கள் (மதுரை), திரு.என்.ப.சிவராமன்,இ.கா.ப., அவர்கள் (சேலம் வடக்கு), திரு.பி.தங்கதுரை,இ.கா.ப., அவர்கள் (செங்கல்பட்டு), திரு.வி.வி.சாய் பிரனீத்,இ.கா.ப., அவர்கள் (செங்கல்பட்டு), தேவகே ாட்டை சார் ஆட்சியர் திரு.ஆயுஷ் வெங்கட் வட்ஸ்,இ.ஆ.ப., அவர்கள், இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி பாரதி மற்றும் அரசின் பல்வேறு துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் காவல்துறையை சார்ந்தோர் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில்,

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கண்டதேவி அருள்மிகு ஸ்ரீ சொர்ணமூ ர்த்தீஸ்வரர் திருக்கோயிலானது இந்துசமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சிவகங்கை தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் திருக்கோயிலாகும்.

இத்திருக்கோயிலானது தென்னிலை, உஞ்சனை, செம்பொன்மாரி, இறகுசேரி நாடுகள் எனும் பகுதிகளுக்கு கீழ் உள்ள கிராம மக்களுக்கான தலைமை கோயில் ஆகும். சிவகங்கை தேவஸ்தானம் நிர்வாகத்தில் உள்ள கண்டதேவி அருள்மிகு குங்குமகாளியம்மன் திருக்கோயில் உற்சவத்தினை தொடர்ந்து, இத்திருக்கோயில் உற்சவமானது ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் பத்து நாட்கள் நடைபெறும். இத்திருவிழாவில், எவ்வித பாகுபாடின்றி தேர்வடம் பிடித்து இழுக்கப்பட்டு திருவிழா சிறப்பாக நடைபெறும்.

இத்திருக்கோயில் திருத்தேரோட்டமானது 1998 முதல் 2001ஆம் ஆண்டு வரை சட்டம், ஒழுங்கு பிரச்சினைகள் காரணமாக நடைபெறவில்லை. 2002, 2004, 2005 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் ஒருங்கிணைப்புக் கூட்டமானது நடத்தப்பட்டு திருத்தேரோட்டமானது நடைபெற்றது. 2003ஆம் ஆண்டு ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இருதரப்பினரிடையே சுமூக உறவு ஏற்படாததால் திருத்தேரோட்டம் நடைபெறவில்லை.

2007ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை திருப்பணி மேற்கொள்ளப்பட்டதால் திருத்தேரோட்டம் நடைபெறவில்லை. 05.02.2012 அன்று குடமுழுக்கு நடைபெற்றது.

அரசாணையின்படி, ஆய்வுக்குழுவினர் பழைய திருத்தேரினை பார்வையிட்டு குழு அறிக்கையின்படி, 22.04.2015 அன்று பழைய தேரானது பிரிக்கப்பட்டு ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் புதிய திருத்தேர் பணியானது மேற்கொள்ளப்பட்டு, 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் திருத்தேர்பணியானது முடிவுற்றது (திருத்தேர் உயரம் 13 அடி 3 அங்குலம் சிம்மாசனம் வரை அகலம் 13 அடி 3 அங்குலம், எடை 26 டன்கள்). தேரோடும் வீதி சுமார் 3 கி.மீ ஆகும்.

2019ஆம் ஆண்டில் நான்கு நாட்டார்கள் சேர்ந்து திருத்தேர் வெள்ளோட்டம் தொடர்பான ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ளாததால் அவ்வருடம் வெள்ளோட்டம் நடைபெறவில்லை. 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் கொரோனா பெருந்தொற்று காரணமாக திருத்தேர் வெள்ளோட் டமானது நடைபெற வில்லை. 17.06.2022 அன்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுமூக உறவு எட்டப்படாததால் திருத்தேர் வெள்ளோட்டம் நடைபெறவில்லை.



அதன்பின்பு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, ஒருங்கிணைப்புக் கூட்டமானது சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் 09.11.2023 அன்று அனைத்து தரப்பினர்களைக் கொண்டு நடத்தப்பட்டு 11.02.2024 அன்று திருத்தேர் வெள்ளோட்டமானது நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து, கடந்த வருடம் ஆனி திருவிழாவானது 13.06.2024 அன்று துவங்கி 22.06.2024 அன்று நிறைவுபெறும் வகையில் நடைபெற்றது. அதில், முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டமானது 21.06.2024 அன்று சிறப்பாக நடைபெற்றது. 2006ஆம் ஆண்டிற்கு பின்பு 17 வருடங்கள் கடந்து திருத்தேரோட்டமானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான வழிகாட்டுதலின்படி, கடந்தாண்டு இனிதே நடத்தப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், இந்த ஆண்டின் ஆனித்தி ருவிழாவும் கடந்த 30.06.2025 அன்று துவங்கி 09.07.2025 அன்று நிறைவு பெறும் வகையில் நடைறெவுள்ளது. அதில், முக்கிய நிகழ்வான தேரோட்டமும் இன்றையதினம் காலை 6.15 மணிக்கு சிறப்பாக துவங்கப்பட்டு, 7.45 மணியளவில் இனிதே நிறைவு பெற்றுள்ளது. இத்திருத்தேரோட்டத்தில் அனைத்து சமுதாய மக்களும் கலந்துக்கொண்டு, மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஆண்டின்படி, மாண்புமை உயர்நீதிமன்ற ரிட் மனுக்கள் 13236 மற்றும் 13099/2024 மீதான 20.06.2024 தேதிய பொதுவான உத்தரவின் அடிப்படையில், அதனை இவ்வாண்டும் கடைபிடித்திடும் பொருட்டு, நான்கு நாட்டார்களில் உஞ்சனை மற்றும் செம்பொன்மாரி நாட்டார்கள் தரப்பில் அவர்களுக்கான மரியாதையினை பெற்றுக்கொண்டனர். தென்னிலை மற்றும் இறகுசேரி நாட்டார்கள் சார்பில் சிவகங்கை தேவஸ்தானம் மரியாதையினை பெற்றுக்கொண்டனர்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் திருவாரூர் தேர் திருவிழா நடைபெறுவதற்கு வழிவகுத்தார்கள். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில், தமிழகத்தில் சிறப்பான ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பல ஆண்டுகளுக்கு பின்னர், கடந்த ஆண்டை போலவே, இவ்வாண்டும் இன்றைய தினம் கண்டதேவி கிராமத்தில் அருள்மிகு சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில் தேரோட்ட திருவிழா மாவட்ட நிர்வாகம், காவல்துறை மற்றும் தேவஸ்தானம், பொதுமக்கள் ஆகியோர்களின் பங்களிப்புடன் சிறப்பாக நிறைவுபெற்றுள்ளது என்பது வரலாற்று சிறப்புமிக்க ஒன்றாகும். இனிவரும் காலங்களிலும் ஒவ்வொரு ஆண்டும், அருள்மிகு ஸ்ரீ சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில் தேரோட்ட திருவிழா இதேபோன்று, மேலும் சிறப்பாக நடைபெறுவதற்கு அனைவரும் முழு ஒத்துழைப்பினை நல்கிட வேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

## VIP செஸ் அகாடமி நடத்திய முதல் மாநில அளவிலான சதுரங்க போட்டிகள் ஜூலை 6, 2025 அன்று தாம்பரம் வள்ளுவர் குருகுலம் பள்ளியில் நடைபெற்றது

தாம்பரம், ஜூலை.09-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் VIP செஸ் அகாடமி சார்பில் முதல் மாநில அளவிலான சதுரங்க போட்டிகள் நடைபெற்றது.




இந்தப் போட்டியில் செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், அரியலூர், திருச்சி, சேலம், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி என தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுமார் 450 க்கும் மேற்பட்ட செஸ் வீரர் வீராங்கனைகள் பங்கேற்று அசத்தினர்.

8, 10, 13, 25 வயதுக் குட்பட்ட மாணவர்களுக்கு நடத்தப்பட்ட இந்த போட்டிகளில் ஒவ்வொரு பிரிவினருக்கும் தலா ஆறு சுற்றுகள் என ஆண், பெண் என தனித்தனியாக நடைபெற்றது.

காலை 9 மணிக்கு தொடங்கிய இப்போட்டிகளில் முதல் 30 இடங்களை பிடித்த வீரர்களுக்கு வெற்றிக் கோப்பைகளும் பதக்கங்களும் மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வழங்கப்பட்டது.

பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட தாம்பரம் மணிமங்கலம் தனலட்சுமி கல்லூரியின் பேராசிரியர் மற்றும் EEE துறை தலைவர் டாக்டர் பாலமுருகன் தாம்பரம் பெருங்களத்தூர் GKM கல்லூரியின் துணை முதல்வர் மற்றும் பேராசிரியர் டாக்டர் வெங்க டேசன் மற்றும் VIP செஸ் அகாடமியின் தலைவர் கோகிலா ராஜேஷ், செயலாளர் பிரவீன் ஆகியோர் பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர். இதில் கலந்து கொண்ட எட்டு வயதுக்கு உட்பட்ட அனைத்து வீரர்களுக்கும் அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக பதக்கங்கள் வழங்கப்பட்டது. மற்றும் போட்டியில் கலந்து கொண்ட அனைத்து வீரர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இந்தப் விளையாட்டுப் போட்டியில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக நிவாகிகள் மற்றும் உறுப்பினர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கு பெற்று விழாவை சிறப்பு செய்தனர்.

இந்த போட்டிக்கான ஏற்பாடுகளை VIP செஸ் அகாடமியின் தலைவர் திருமதி கோகிலா ராஜேஷ் செய்திருந்தார்.

## பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வருகின்ற 12.07.2025 அன்று சிவகங்கை மாவட்ட முழுவதும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.09-

சிவகங்கை மாவட்டம் பொது விநியோகத்திட்டத்தில் 2025ம் ஆண்டு ஜூலை மாதத்திற்கான மக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாம் வருகின்ற 12.07.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை சிவகங்கை மாவட்டம் முழுவதும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை / நகல் அட்டை, கைப்பேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் மற்றும் பொது விநியோக கடைகளின் செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் குறித்த புகார்களை தெரிவிக்கும் பொருட்டும் பொதுமக்கள் தாங்கள் குடியிருக்கும் வட்டத்தில் அந்தந்த வட்ட வழங்கல் அலுவலகத்தில் மனு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## தூய்மை பாரத இயக்கம்(ஊரகம்) திட்டத்தின் கீழ் தூய்மை கணக்கெடுப்பு

கன்னியாகுமரி, ஜூலை.09-

கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட கிராம ஊராட்சிகளை 2025 சுகாதார கணக்கெடுப்பு (ஊரகம்) என்ற சுகாதார கணக்கெடுப்பினை மத்திய அரசு குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை மூலம், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதிII ன்படி அடைந்துள்ள சுகாதார நிலையினை மதிப்பீடு செய்து, ஊராட்சி மற்றும் மாவட்டத்தினை இக்கணக்கெடுப்பின் மூலம் அளவீடு செய்து, தரவரிசை மேற்கொண்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்ட கிராம ஊராட்சிகள், மாவட்டம் மற்றும் மாநிலத்தினை கௌரவிக்கப்படவுள்ளது.

எனவே கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் பொதுமக்கள் சுகாதாரத்தில் தங்கள் ஊராட்சியின் நிலையினையும், மாவட்டத்தின் நிலையினையும் கைபேசி வழி ளுளுபு2025 என்ற செயலினை பதிவிறக்கம் செய்து தங்களது கருத்துகளை பதிவிடலாம்.

மேலும் இக்குழு 2025ஜூலை முதல் வாரத்திலிருந்து மாவட்டத்திற்கு வருகை தந்து கணக்கெடுப்பு மேற்கொள்ளவுள்ளது. எனவே அனைத்து கிராம மக்களும் தன்சுத்தம், வீடுகளின் சுற்றுப்புற சுத்தம், தெருக்களின் சுத்தம் மற்றும் கிராமஊராட்சியின் தூய்மையினை கடைபிடிக்கவும், திடக்கழிவு மற்றும் திரவக்கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தவும், ஊராட்சியினை தூய்மையான கிராமமாக வைத்திடவும், 2025 தூய்மை கணக்கெடுப்பு ஊரகம் குழுவிற்கு முழு ஒத்துழைப்பு நல்கவும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.




இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ் வளர்ச்சித்துறையின் மூலம் தமிழ்நாடு நாளினை முன்னிட்டு

## மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டு சான்றுகள் வழங்கும் நிகழ்ச்சி

இராமநாதபுரம், ஜூலை.09-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ் வளர்ச்சித்துறையின் மூலம் தமிழ்நாடு நாளினை முன்னிட்டு மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டு சான்றுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட அளவில் கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜூலை 18ம் நாளினையே தமிழ்நாடு நாளாக கொண்டாடப்படும் என அறிவித்திருந்தார்கள். அவ்வறிவிப்பிற்கிணங்க 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மாவட்ட அளவில் கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகள் 04.07.2025 அன்று முகமது சதக் தஸ்தகீர் கல்வியியல் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு முதல் பரிசு ரூ.10,000 இரண்டாம் பரிசு ரூ.7,000, மூன்றாம் பரிசு ரூ. 5,000 மற்றும் சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியின்போது தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திருமதி. சபீர் பானு அவர்கள் உடனிருந்தார்.

## சேலம் கலெக்டர் அலுவலகத்தில் அடுத்தடுத்து 2 பேர் தீக்குளிக்க முயற்சி: மண்ணெண்ணெயுடன் வந்த பெண்ணால் பரபரப்பு

சேலம், ஜூலை.09-

சேலம் கலெக்டர் அலுவலகத்தில் அடுத்தடுத்து 2 பேர் தீக்குளிக்க முயன்றதுடன், மண்ணெண்ணெயுடன் வந்த பெண்ணால் பரபரப்பு ஏற்பட்டது. சேலம் கலெக்டர் அலுவலகத்தில், மாவட்ட பொதுமக்கள் குறைதீர் கூட்டம் டிஆர்ஓ ரவிக்குமார் தலைமையில் நேற்று நடந்தது.



இதில், ஓமலூர் அடுத்த கஞ்சநாயக்கன்பட்டி கோட்டைமேடு பகுதியை சேர்ந்த குழந்தை அம்மாள், தனது மகன் நடேசன் (43) மற்றும் 2 பேரன்களுடன் மனு கொடுக்க வந்தார். நுழைவு வாயில் அருகே திடீரென நடேசன் தன் மீது மண்ணெண்ணெயை ஊற்றி தீக்குளிக்க முயன்றார். அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார், அவரை தடுத்து நிறுத்தி தண்ணீரை ஊற்றி விசாரித்தனர்.

இதுகுறித்து குழந்தை அம்மாள் கூறுகையில், ''எனது மகன் நடேசன் கட்டிட வேலை செய்து வந்தான். வேலை செய்யும் போது கீழே விழுந்ததில் 2 கால்களிலும் முறிவு ஏற்பட்டதால் வேலைக்கு செல்ல முடியவில்லை. இதனால் தற்போது வீட்டிலேயே இருந்து வருகிறான். இதனிடையே வீட்டை அடமானமாக வைத்து தனியார் நிதி நிறுவனத்தில் பெற்ற கடனை அடைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் அந்த வீட்டை அவர்கள் கைப்பற்ற முயற்சி எடுத்து வருகின்றனர்.

அதேசமயம், அருகில் இருக்கும் எங்களுக்கு சொந்தமான 40 சென்ட் நிலத்தை விற்று கடனை அடைக்கலாம் என முயற்சி செய்தோம். ஆனால் அந்த நிலத்திற்கு செல்லும் பாதையை தனிநபர் ஒருவர் அடைத்து நிலத்தை விற்க விடாமல் தடுத்து வருகிறார். இதுகுறித்து பலமுறை அதிகாரிகளிடம் மனு கொடுத்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே கலெக்டர் இதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என்றார்.

இதனிடையே கொண்டலாம் பட்டியைச் சேர்ந்த சுப்ரமணியன் என்பவர் தனது தந்தையுடன் மனு அளிக்க வந்தார். திடீரென மண்ணெண்ணெய் எடுத்து ஊற்றிக் கொண்டு தீக்குளிக்க முயன்றார். அவரிடம் போலீசார் மேற்கொண்ட விசாரணையில், தனது சகோதரர் ரூ.2 கோடி மதிப்பிலான சொத்தை அபகரித்துக் கொண்டதாக குற்றம்சாட்டினார். இதேபோல் வாழப்பாடி அடுத்த ஏத்தாப்பூர் ரோடு பகுதியை சேர்ந்தவர் பழனியம்மாள் (40). இவர் தனது தாயுடன் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்தார்.

அவரை போலீசார் சோதனை யிட்டபோது, பையில் மண்ணெண்ணெய் பாட்டில் இருந்தது. போலீசார் இதனை பறிமுதல் செய்து விசாரித்தனர். அப்போது அவர்கள் கூறுகையில், ''எங்களுக்கும் அதேபகுதியில் உள்ள ஒருவருக்கும் நில பிரச்னை உள்ளது.

எங்களது நிலத்தையும் சேர்த்து அவர் பட்டா போட்டுள்ளார். மேலும் அரசு நிலத்தையும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். இதுபற்றி போலீசில் புகார் அளித்தோம். இதனால் அந்த நபர் மிரட்டல் விடுத்து வருகிறார். இதுதொடர்பாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என்றனர்.





■ திருப்பூர் மாநகராட்சி வார்டு 44 கஜலட்சுமி தியேட்டர் சாலையில் பொது சுகாதாரம் மற்றும் திருப்பூர் மாநகராட்சி இணைந்து நடத்தும் "நடப்போம் நலம் பெறுவோம் 2.0" நடைபயிற்சிக்காக நடைபாதை தேர்வு செய்வது குறித்து மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெயந்தி ,மாநகர நல அலுவலர் மரு.முருகானந்த்,உதவி பொறியாளர் சுப்பிரமணி, பொது சுகாதாரத்துறை அலுவலர்கள் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்







■ சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டம் திருமூர்த்தி நகரில் இலங்கை வாழ் தமிழர் மறுவாழ்வு முகாமில் இலங்கைத் தமிழர்களுக்கான 35 குடியிருப்பு வீடுகளை திறந்து வைத்தார்.உடன் மனிதவள மேம்பாட்டு துறை கயல் விழி செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் மணிஷ்நாரணவவே, மாவட்ட வளர்ச்சிக்கு முகமையின் திட்ட இயக்குநர் மலர்விழி,தளி பேரூராட்சி தலைவர் உதயகுமார் மற்றும் துறை சிறந்த அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

# பாலக்காட்டில் நிபா வைரஸ் பரவல் தீவிரம் 143 பேர் தனிமை படுத்தப்பட்டனர்: தடுப்பு நடவடிக்கை குறித்து அமைச்சர் தலைமையில் ஆலோசனை

பாலக்காடு, ஜூலை.09-

பாலக்காடு மாவட்டத்தில் நிபா வைரஸ் பரவல் தீவிரமடைவதை தடுக்க சுகாதாரத்துறை அமைச்சர் தலைமையில் ஆலோசனை நடத்தப்பட்டது.பாலக்காடு மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கேரள சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் மாவட்ட கலெக்டர் பிரியங்கா, கூடுதல் இயக்குநர் பொது சுகாதாரத்துறை துணை இயக்குநர் டாக்டர். ரீத்தா, மாவட்ட மருத்துவ அதிகாரி வித்யா, மாவட்ட எஸ்.பி., அஜித்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.



பாலக்காடு மாவட்டத்தில் மன்னார்க்காடு தாலுகா தச்சநாட்டுக்கரா கிராம பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதியில் 38 வயது பெண் நிபா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு பெரிந்தல்மன்னாவிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வந்தார். தற்போது அவரது உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் கோழிக்கோடு மாவட்ட அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாவட்டத்தில் தற்போதைய நிலவரப்படி 143 பேரினை தனிமைப்படுத்தி ஆய்வு மேற்கொண்டுள்ளனர். இவர்களது ரத்த மாதிரிகள் சேகரித்து பரிசோதனை நடத்தி வருகின்றனர். தச்சநாட்டுக்கரா கிராமப் பஞ்சாயத்தில் 7, 8, 9, 11 ஆகிய வார்டுகளில் வசிக்கின்ற மக்களை தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர். மேலும், கரிம்புழா கிராமப்பஞ்சாயத்தில் 17, 18 ஆகிய இரண்டு வார்டுகளில் வசிப்பவர்கள் தனிமைப் படுத்தப் பட்டுள்ளனர்.

மேற்கண்ட பகுதிகளில் சுகாதாரத்துறையினர் வீடுவீடாக சென்று அவர்களது நோய் அறிக்கைகள் ஆய்வு செய்த வண்ணம் உள்ளனர். பாலக்காடு மாவட்டத்திலுள்ள பொதுமக்களுக்கு நிபா வைஸ் நோய் குறித்து சுகாதாரத்துறையின் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகளில் வசிப்பவர்கள் என் 95 மாஸ்க் கட்டாயம் அணியவேண்டும் எனவும்,கைகளை அடிக்கடி சோப்பு போட்டு கழுவ வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும், காய்ச்சல், இருமல், தலைவலி, மூச்சுத்திணறல்,மயக்கம், மனநிலை பாதிப்புகள் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக சுகாதாரத்துறை ஊழியர்களிடம் தெரிவிக்க வேண்டும் என முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது. நிபா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க அனைத்து உயர் அதிகாரிகளும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள வார்டுகளிலும், நிபா வைரஸ் நோய் பாதிக்கப்பட்ட பெண் வீட்டின் 3 கிலோ மீட்டர் சுற்றுப்பகுதியில் தடுப்பு வேலிகள் அமைத்து போலீசார் 24 மணிநேரமும் பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம், சுகாதாரத்துறை நிர்வாகம் கூடுதல் கண்காணிப்பில் ஈடுப்பட்டுள்ளனர் என அமைச்சர் ஆலோசாணை கூட்டத்தில் எடுக்கப்பட்ட நிபந்தனைகளை தெரிவித்தார்.



# வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனையை முழுமையாக செயல்படுத்த கோரி அதிமுக கண்டன ஆர்ப்பாட்டம்

வேலூர், ஜூலை.09-

வேலூர் மாவட்டம், வேலூர் அரசு பென்ட்லேண்ட் பல்நோக்கு மருத்துவமனை கடந்த மாதம் ஜூன் 25ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் 7 மாடி கட்டிடத்தை அவசர அவசரமாக திறந்து வைத்தார். அப்போது எந்தவித மருத்துவ உபகரணங்களும் அமைக்கப்படவில்லை என்றும் மருத்துவர்கள், பணியாளர்களை நியமித்து உடனே திறக்க வேண்டும் என்றும் கூறி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி 8ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் வேலூரில் அதிமுகவினர் நடத்துவார்கள் என்று அறிக்கை வெளியிட்டார். அதன்படி வேலூர் அதிமுக தேர்தல் பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான முக்கூர் சுப்பிரமணியன், அமைப்பு செயலாளர் ராமு, மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.கே. அப்பு, மற்றும் நிர்வாகிகள் வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் செய்ய முயன்றனர். ஆனால் காவல்துறை போராட்டத்திற்கு அனுமதி இல்லை என்று கூறி அதிமுகவினரை விரட்டி, விரட்டி பிடித்து காவல்துறை வண்டியில் ஏற்றினர். ஏறாதவர்களை குண்டுகட்டாக தூக்கினர். இதில் மாவட்ட பொருளாளர் மூர்த்தி, காட்பாடி ஒன்றிய செயலாளர்கள் சுபாஷ், சின்னதுரை, சைலஜம், பகுதி செயலாளர் நாராயணன், வேலூர் மாநகராட்சி எதிர்கட்சி தலைவர் எழிலரசன், அதிமுக மாநகராட்சி கவுன்சிலர் கே.பி.ரமேஷ், வண்டறந்தாங்கல் கிராம பஞ்சாயத்து தலைவர் ராகேஷ், சோளிங்கர் (மேற்கு ) ஒன்றிய முன்னாள் அதிமுக செயலாளர் ஆனந்தன், ஒன்றிய, நகர, பகுதி செயலாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். சுமார் 300 பேர் கொண்ட அதிமுகவினரை கைது செய்த காவல்துறையினர் அவர்களை தனித்தனியாக தனியார் மண்டபங்களில் அடைத்துவைத்தனர்.

# திருவண்ணாமலையில் பவுர்ணமி கிரிவலம் வர உகந்த நாள் அறிவிப்பு

திருவண்ணாமலை, ஜூலை.09-

பஞ்ச பூத தலங்களில் அக்னி தலமாக விளங்கும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் மாதந்தோறும் பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள், அண்ணாமலையாரை தரிசனம் செய்துவிட்டு மலையே மகேசனாக விளங்கும் அண்ணாமலையை வலம் வந்து (கிரிவலம்) வழிபடுகின்றனர். அதன்படி, ஆனி மாத பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம் வரும் 10ம் தேதி அதிகாலை 2.33 மணிக்கு தொடங்கி, 11ம் தேதி அதிகாலை 3.08 மணிக்கு நிறைவடைகிறது. எனவே, 11ம் தேதி இரவு கிரிவலம் செல்ல உகந்தது என அண்ணாமலையார் கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது. இதையொட்டி, கிரிவல பக்தர்களுக்காக, அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது. அதேபோல், காட்பாடி மற்றும் விழுப்புரம் வழித்தடங்களில் திருவண்ணாமலை - சென்னை பவுர்ணமி சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன.



# டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனையின் புதிய நவீன மருத்துவமனை சிவகாசியில் திறப்பு

சிவகாசி, ஜூலை.9

டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை தனது புதிய நவீன மருத்துவமனையை சிவகாசியில் திறந்துள்ளதை பெருமையுடன் அறிவித்துள்ளது. இந்த மருத்துவமனையை, சிவகாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் A.S.S.G.அஷோக்கன் திறந்துவைத்தார். திறப்பு விழாவில் டாக்டர் அகர்வால்ஸ் குழுமத்தின் உயர்மட்ட நிர்வாகிகளும், உள்ளூர் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர். இந்த புதிய மையம், சிவகாசி மற்றும் சுற்றுவட்டார மக்களுக்கு உலகத்தரமான கண் சிகிச்சையை நெருக்கமாக கொண்டுவரும் நோக்கத்தில் மிக முக்கியமான அடியெடுப்பாகும். அதிநவீன பரிசோதனை மற்றும் அறுவை சிகிச்சை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனையில், LASIK, கிளோகோமா மற்றும் குழந்தைகளுக்கான கண் சிகிச்சை உள்ளிட்ட முழுமையான கண் சிகிச்சைகள் வழங்கப்படும். இம்மருத்துவமனை சிவகாசி காந்தி சாலையில் அமைந்துள்ளது.திறப்பு விழாவை முன்னிட்டு, அனைத்து வயதினருக்கும் இலவச முழுமையான கண் பரிசோதனையை வழங்குகிறது.

# தமிழகம் முழுவதும் 1 லட்சம் தன்னார்வலர்கள் மூலம் மகளிர் உரிமைத்தொகை திட்டத்திற்கான விண்ணப்ப விநியோகம் தொடங்கியது: வீடு வீடாக சென்று வழங்கினர்

சென்னை, ஜூலை.09-

தமிழகத்தில் 1 லட்சம் தன்னார்வலர்கள் வீடு வீடாக சென்று கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்திற்கான விண்ணப்பத்தை நேற்று முதல் விநியோகம் செய்தனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த சட்டமன்ற பேரவை கூட்டத்தில், மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார். அதன்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில், 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டம் துவக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் கீழ் நடத்தப்படும் முதல் முகாமை வருகிற 15ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின், கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்க உள்ளார். இந்த திட்டம் ஜூலை 15 முதல் நவம்பர் மாதம் வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறுகிறது.



தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசு துறைகளின் சேவைகள், திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த திட்டத்தின் கீழ் நகர்ப்புற பகுதிகளில் 3,768 முகாம்களும், ஊரக பகுதிகளில் 6,232 முகாம்களும் நடைபெறும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசு துறைகளை சார்ந்த 43 சேவைகளும், ஊரக பகுதிகளில் 15 துறைகளை சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனை பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

இந்த திட்டத்தின் கீழ், தன்னார்வலர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாக சென்று முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள், சேவைகளை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தையும் வழங்குவார்கள். மேலும், இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்கு சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களில் மட்டுமே வழங்கப்படும்.

இத்திட்டம் குறித்த விபரங் களை பொதுமக்களுக்கு முறையாக தெரிவிப்பதற்காக, 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் கீழ் தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாக சென்று விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணி நேற்று முதல் தொடங்கியது. இந்த பணிக்காக சுமார் 1 லட்சம் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த தன்னார்வலர்கள், விண்ணப்பங்களை தமிழகம் முழுவதும் நேற்று முதல் வீடு வீடாக சென்று வழங்கும் பணியை தொடங்கினர். இந்த பணி மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக நடைபெறும். 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தில் தங்கள் பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் மற்றும் அரசின் 40க்கும் மேற்பட்ட சேவைகள் பெறுவதற்கான விண்ணப்பங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

இதையடுத்து விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்திற்காக ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் தமிழகம் முழுவதும் ஜூலை 15 முதல் நவம்பர் மாதம் வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் வழங்கலாம். முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தகுதியுள்ள அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. தமிழ்நாட்டில் தற்போது வரை கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் 1.15 கோடி பெண்களுக்கு மாதம்தோறும் ரூ.1000 உதவித்தொகை வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தகுதியுள்ள அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

# மதுரையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம், ஆடியில் அம்மன்கோவில்கள் ஆன்மீக சுற்றுலா அமைச்சர் இராஜேந்திரன் தகவல்

மதுரை, ஜூன்.09-

தமிழ்நாடு முதலமைச்சர் வழிக்காட்டுதலின்படி சுற்றுலாத்துறை மேம்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஆன்மீக சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் மதுரையில் உள்ள பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களை தரிசனம் செய்யும் வகையில் காலை 8.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை ஒரு நாள் ஆடிஅம்மன் தொகுப்பு சுற்றுலா 18.07.2025 அன்று முதல் செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இயக்கப்படுகிறது.

ஆடி அம்மன் சுற்றுலா மதுரை ஓட்டல் தமிழ்நாடு, அழகர் கோயில் சாலை, மதுரையிலிருந்து அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில், மதுரை - அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், வண்டியூர் அருள்மிகு காளியம்மன் திருக்கோவில், மடப்புரம் அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோவில், விட்டனேரி -அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோவில், தாயமங்கலம் -அருள்மிகு ராக்காயி அம்மன் திருக்கோவில், அழகர் கோவில் ,ஆகிய திருக்கோயில்களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1400/.

இச்சுற்றுலாக்களில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு, அனைத்து கோவில்களின் பிரசாதம் மற்றும் சிறப்பு விரைவு தரிசனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே சுற்றுலா பயணிகள், ஆன்மீக அன்பர்கள் இந்த அறிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட இந்த சுற்றுலாக்களுக்கு www. ttdconline.com என்ற இணையத்தில் பதிவு செய்து கொள்ளலாம். மேலும், விவரங்களுக்கு 1800425 31111, 0452253746162 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

## வேலூர் கோட்டை சுற்றுசாலையில் போக்குவரத்து நெரிசல் தொடரும் விபத்துக்கள்



வேலூர், ஜூலை.09-

வேலூர் கோட்டை சுற்றுச்சாலையில் பாதாள சாக்கடை திட்டப் பணிக்காக பள்ளங்கள் தோண்டப்பட்ட பொழுது குடிநீர்செல்லும் பழுப்பு உடைபட்டு பல நாட்கள் ஆகியும் இது சரி செய்யாத காரணத்தினால் சாலை முழுவதும் வீணாய் போகும் குடிநீர்

இப்பணிக்காக தோண்டப்பட்ட சாலையை சீரமைக்கப்படவில்லை இதனால் இப்பகுதியில் அனுதினமும் வாகன நெரிசல் ஏற்படுகின்றன அதனால் இப்பகுதியில் தொடரும் விபத்துக்கள் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள்பெரும் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர் பொதுமக்களின் நலனை கருதி சம்பந்தப் பட்ட துறையினர் உடனடியாக சரி செய்யும் படி பொதுமக்கள் மற்றும் சமூக அலுவலர் கோரிக்கை வைக்கின்றனர்

## தாம்பரத்தில் தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு இந்திய மருத்துவ சங்கத்தின் சார்பில் 100 சிறந்த மருத்துவர்களுக்கு விருது வழங்கும் விழா



தாம்பரம், ஜூலை.09-

செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு தாம்பரத்தில் உள்ள இந்திய மருத்துவ சங்க வளாகத்தில் தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு இந்திய மருத்துவ சங்கம் சார்பில் 100 மருத்துவர்களுக்கு சிறந்த மருத்துவர்களுக்கான விருதுகள் வழங்கும் விழா மாநிலத் தலைவர் டாக்டர் செங்குட்டுவன், மாநிலச் செயலாளர் எஸ் கார்த்திக் பிரபு தலைமையில் பொருளாளர் டாக்டர் கௌரி சங்கர் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் ராஜமூர்த்தி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறந்த மருத்துவர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தனர்.

இந்திய மருத்துவ சங்க விருது வழங்கும் விழாவில் தமிழகத்தில் மருத்துவத்துறையில் மகத்தான பணியாற்றிய தாராபுரத்தை சேர்ந்த டாக்டர் லோகநாயகி, டாக்டர் பிரபு, டாக்டர் சத்யா கோபிசெட்டிபாளையம் டாக்டர் குமரேசன், குடியாத்தம் டாக்டர் சுதாகர், டாக்டர் கிருத்திகாதேவி உள்ளிட்ட 100 மருத்துவர்களுக்கு மூத்த குடிமக்கள், சிறந்த மருத்துவர், சிறப்பான சேவை செய்தவர்கள் என பல்வேறு பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டது. தமிழகம் முழுவதிலுமிருந்து பல மருத்துவர்கள் அவரது குடும்பத்தினரோடு கலந்து கொண்டு விருதுகளை பெற்றுக் கொண்டனர்.

மாநில செயலாளர் எஸ்.கார் த்திக் பிரபு கூறுகையில் மருத்துவர் மட்டும ல்லாமல் வெஸ்ட் பெங்கால் சீப் மினிஸ்டர்ராக இருந்தவர் அதனால் எல்லா மாவட்டத்திலிருந்து டாக்டர்களை தேர்வு செய்து சான்றிதத்தாள்களை வழங்கப்பட்டது இந்த நாளன்று மருத்துவர்களுக்கான சேவை செய்வதற்கான இந்த விழாவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

விருது பெற்றது குறித்து மருத்துவர் லோகநாயகி கூறுகையில், விருது பெற்ற மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. மக்களுக்கு இன்னும் சிறப்பாக பணியாற்றவேண்டும் என்ற ஊக்கம் அளிக்கிறது என தெரிவித்தார்.



■ மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் நடைபெறுவதை முன்னிட்டு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி ஆகியோர் முன்னேற்பாடு பணி மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் ஆகியோர் உடன் உள்ளனர்





## வேலூர் மாவட்ட வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் இணை மானிய நிதி திட்டத்தில் பயனடைந்த பயனாளிகள் முதல்வருக்கு நன்றி

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் இணை மானிய நிதி திட்டத்தில் பயனடைந்த கீழ்முட்டுகூர் கிராமத்தை சார்ந்த பயனாளி திருமதி எம்.கோட்டீஸ்வரி, அவர்கள் தெரிவித்ததாவது.

என்னுடைய பெயர் எம். கோட்டீஸ்வரி. நான் வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியம், கீழ்முட்டுகூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய பெற்றோர்கள் பெயர் வேண்டாமணி. நான் 10 ஆம் வகுப்பு தான் படித்து முடித்தேன். அதன் பிறகு என்னால் படிப்பை தொடர முடியவில்லை. என்னுடைய அம்மா வீட்டில் சும்மா தானே இருக்கே டெய்லரிங் ஆவது முடி என்று கூறினார். சிஎம்சி கிளை மூலமாக ரூசா என்ற கிளையில் ஒரு வருடம் டெய்லரிங் படித்து முடித்தேன். அதன் பிறகு 3 முதல் 4 ஆண்டுகளாக டெய்லரிங் பணி புரிந்தேன். அதன் பிறகு எனக்கு வருமானம் போதுமானதாக இல்லை என்பதால் வீட்டின் அருகே கூலி வேலை மற்றும் வெளி வேலை கம்பெனியில் வேலை செய்தேன். அதன் பிறகு நட்சத்திரா என்ற மகளிர் குழுவில் 10 ஆண்டுகளாக உறுப்பினராக இருந்தேன். இக்குழு மூலமாக எனக்கு என் வசிப்பிடத்தில் அருகில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் தொழில்புரியலாம் என என்னிடம் தெரிவித்தனர். அதன் மூலமாக நான் வாழ்ந்து காட்டுவோம் கிளையை அணுகி ரூ.3,00,000/ கடனுதவி வேண்டி விண்ணப்பித்தேன். உரிய ஆவணங்களை சமர்ப்பித்த பிறகு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் எனக்கு கடனுதவி வழங்கினார்கள். அதன் பிறகு தனியே டி.ஆர். டிசைனர் லேடீஸ் டெய்லர் என்ற கடையை நடத்தி வருகிறேன். இந்த




கடையில் நான் 4 பேருக்கு வேலை வழங்கி வருகிறேன். இந்த கடையில் முழுவதும் மகளிருக்கு அனைத்து விதமான ஆடைகளும் தைத்து கொடுத்து வருகிறோம்.

தற்போது எனக்கு ரூபாய் 20,000 முதல் ரூபாய் 25,000 வரை சம்பாதிக்கிறேன். இதன் மூலம் என் குடும்ப செலவுகளை நானே பார்த்து கொள்கிறேன். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் கடனுதவி அளித்து, தொழில்முனைவோராக என்னுடைய மனம் நிறைந்துள்ளது. என்னை போன்ற மகளிரின் பொருளாதார நிலையை உயர்த்தி இன்று நான் ஒரு தொழில்முனைவோராக இருக்க காரணமாக உள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் இணை மானிய நிதி திட்டத்தில் பயனடைந்த புதூர் கிராமத்தை சார்ந்த பயனாளி திருமதி ரூக்மணி, அவர்கள் தெரிவித்ததாவது.

என்னுடைய பெயர் ரூக்மணி. நான் வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியம், புதூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நானும், எனது கணவரும் விவசாயம் செய்து வருகிறோம். எங்களுக்கு 3 குழந்தைகள். எங்களுக்கு ஒரு ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 50 சென்ட்ல் வேர்க்கடலையும், 10 சென்ட் சோளம், 20 சென்ட் மக்காச்சோளம், 20 சென்ட் கம்பும் விவசாயம் செய்து வருகிறேன். விவசாயம் செய்து வரும் பொருட்களை குறைந்த விலையில் விற்பதால் போதுமான அளவிற்கு வருமானம் இல்லை. குழந்தைகளின் படிப்பு செலவுகளை சமாளிக்க முடியவில்லை. எனவே நான் மகளிர் குழுவில் சேர்ந்து ஏதாவது ஒரு சுயதொழில்புரியலாம் என நினைத்தேன். அப்போது குழுவின் மூலமாக வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் தொழில் தொடங்க 3 நாள் பயிற்சி வழங்கினார்கள். அந்த பயிற்சியில் நான் கலந்து கொண்டேன். இப்பயிற்சியில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் மானியத்துடன் கடனுதவி வழங்குகிறோம் என தெரிவித்தனர். அதன்பிறகு குழு மூலம் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் இணைந்து கடனுதவி கேட்டேன். கடனுதவிக்காக




ஆதார் அட்டை, பான் அட்டை போன்ற ஆவணங்களை கேட்டனர். அதன் பிறகு வங்கியில் கடனுதவி வழங்கப்பட்டது. இதில் வங்கி மூலம் 60 சதவீதமும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் 30 சதவீதமும், என்னுடைய பங்கு 10 சதவீதமும் என ரூ.2,00,000/ கடன் வழங்கப்பட்டது. இந்த கடனுதவி மூலம் கோழிப்பண்ணை வைத்து 3 மாதமாக நடத்தி வருகிறேன். கோழி ஒரு கிலோ ரூ.350 என விற்பனை செய்கிறேன். இதன் மூலம் மாதம் ரூ.10,000 வரை வருமானம் வருகிறது.

நாட்டுக்கோழி அனைத்து விதமான காலநிலைக்கும் தாக்குபிடிப்பதால் அனைவரும் நாட்டுகோழியை விரும்பி கேட்கின்றனர். அதில் சத்து அதிகமாகவும் உள்ளது. நாட்டுகோழி வளர்ப்பில் எந்த இரசாயனமும் பயன்படுத்துவதில்லை என்பதால் அதனை அதிகமாக விரும்புகின்றனர். முதலில் கோழிகளை வெளியில் தான் வங்கி வந்து வளர்த்தேன். தற்போது 3 மாதமாக வளர்த்து வருகிறேன். ஒவ்வொரு கோழியும் 2 முதல் 3 கிலோ எடை இருக்கும். வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் கேட்கும் கோழியை எடை போட்டு கிலோ ரூ.350 க்கு விற்பனை செய்து வருகிறேன். மேலும் நாட்டுக்கோழி முட்டைகளும் சிறிய முட்டை ரூ.10க்கும், பெரிய முட்டை ரூ.15க்கும் விற்பனை செய்து வருகிறேன். இதில் வரும் வருமானம் வங்கியில் வாங்கிய கடனும் செலுத்தி வருகிறேன். வங்கியில் கடன் செலுத்தியது போக மாதம் ரூ.10,000 வரை இலாபம் கிடைக்கிறது. எனவே வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தை அறிவித்து, கடனுதவி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், என் குடும்பத்தின் சார்பாகவும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

**செய்தி வெளியீடு:**

**கதிரவன்**

**செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர், வேலூர் மாவட்டம்.**

## அரண்மனை காத்த அருள்மிகு ஸ்ரீ ஆதி இராஜ வீர காளியம்மன் திருக்கோயிலின் 44ஆம் ஆண்டு பூச்சொரிதல் விழா



சிவகங்கை, ஜூலை.09-

சிவகங்கை மதுரை முக்கு பகுதியில் அருள்பாலித்து வரும் அரண்மனை காத்த அருள்மிகு ஸ்ரீ ஆதி இராஜ வீர காளியம்மன் திருக்கோயிலின் 44ஆம் ஆண்டு பூச்சொரிதல் விழா நடைபெறவுள்ளது.கடந்த 04/07/2025 அம்மனுக்கு காப்பு கட்டப்பட்டது. ஆவனி 20 ஆம் தேதி வெள்ளிக்கிழமை 11/07/2025 ஆம் தேதி பூச்சொரிதல் விழாவை முன்னிட்டு கோவில் அருகில் காலை 11.00 மணியளவில் அன்னதானம் நடைபெறவுள்ளது.அன்று மாலை 4.00 மணியளவில் கரம் எடுத்து வலம் வரும் நிகழ்ச்சியும் இரவு 7.00 மணியளவில் அம்மனுக்கு அபிஷேகம் மற்றும் ஆராதனை நடைபெறும் மேலும் 8.00 மணியளவில் முளைப்பாரி எடுத்து நகர் வலம் நிகழ்ச்சி நடைபெறும் மறுநாள் 12/07/2025 சனிக்கிழமை 8 மணியளவில் ஆடல் பாடல் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விழாவில் பக்த கோடிகள் கலந்துகொண்டு விழாவை சிறப்பிக்குமாறு கோயில் நிர்வாகம் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது..



## நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர திமுக இளைஞரணி சார்பில் தெருமுனை கூட்டம்

### இளம் பேச்சாளர்கள் ரஜினிகாந்த் சிலம்பரசன் பங்கேற்பு

கூடுவாஞ்சேரி, ஜூலை.09-

செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர திமுக இளைஞரணி சார்பில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சாதனை விளக்க தெரு முனை கூட்டம் கூடுவாஞ் சேரி இரயில்வே நிலையம் செல்லும் சாலை ஓரத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர இளைஞரணி அமைப்பாளர் வி.கே.இ.சந்தோஷ்குமார் தலைமை தாங்கினார். முன்னதாக நகர மாண வரணி நிர்வாகி எம்.ரவிக் குமார் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர மன்ற தலைவர் எம்.கே.டி. கார்த்திக் தண்டபாணி, நகர மன்ற துணைத் தலைவர் வழக்கறிஞர் ஜி.கே.லோகநாதன், காஞ் சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், செங்கல்பட்டு சட்டமன்ற பொறுப்பாளர் பிரபு கஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர்கள் திருப்பத்தூர் ரஜினிகாந்த், கே.சிலம்பரசன், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் நந்திவரம் கூடுவாஞ் சேரி நகர நிர்வாகிகள், மற்றும் இளைஞர் அணி முக்கிய நிர்வ ாகிகள் அவினாஷ், ராம்பிரதீப், ஏழுமலை, விடி.சதீஷ்குமார் எம்.தாஜுதீன், கோ. சீனிவாசன், பிரேம்குமார், டில்லிபாபு, விக்னேஷ், ஆகாஷ், உட்பட பலர் பங்கேற்றனர்.

## முருகனின் அறுபடை வீடுகளில் முதல்வீடாக திகழும் திருப்பரங்குன்றத்தில் கும்பாபிஷேக ஏற்பாடுகள் கோலாகலம் : இரவு பகலாக உழைத்திடும் அறங்காவலர் குழு உறுப்பினர்கள்

மதுரை, ஜூலை.09-

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வழி காட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனையின் படியும், ஜூலை மாதம் 14 அன்று நடைபெறவுள்ள குடமுழுக்கு பெருவிழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை அறங்காவலர் குழு தலைவர் சத்யப்ரியா தலைமையில், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் சண்முக சுந்தரம் உள்ளிட்டோர் சிறப்பான முறையில் செய்து வருகின்றனர். அறுபடை வீடுகளில் முதல் வீடாக திகழும் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமித்திருக் கோயி லுக்கு சுமார் இரண் டரை கோடி ரூபாய்க்கு திருப்பணிகள் மேற்கொள் ளப்பட்டு, 14 ஆண்டுகளுக்கு பிறகு வருகின்ற ஜூலை மாதம் 14 அன்று காலை 5.25 மணியிலிருந்து 6.10 மணிக்குள் குடமுழுக்கு நடைபெற உள்ளதை முன் னிட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்தும், இத் திருக்கோயிலின் குடமு ழுக்கிற்கு ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான பக்த ர்கள் வருகை தந்தாலும் அனைவரும் குடமுழுக்கை பார்க்கின்ற வகையில் திருக் கோயிலை சுற்றிலும் எல்இடி அமைத்தல், பக்தர்களுக்கு தேவையான உணவு, குடி நீர், கழிப்பிட வசதி மற்றும் மருத்துவ வசதி போன்ற வற்றை ஏற்படுத்துதல், பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இரவு பகலாக பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த குடமு ழுக்கினை பிச்சை குருக் கள், ராஜா பட்டர், செல்வம் போன்ற அர்ச்சகர்கள் ஒருங் கிணைந்து சீறும்சிறப்புமாக நடத்துவதற்கு உறுதுணை யாக உள்ளனர்.



## தேனி வட்டம், ஜங்கால்பட்டி கிராமத்தில் மாவட்ட ஆட்சியரின் மக்கள் தொடர்பு முகாம் இன்று நடைபெற உள்ளது

தேனி, ஜூலை.09-

தேனி மாவட்டம், தேனி வட்டம், கொடுவிலார்பட்டி உள்வட்டம், ஜங்கால்பட்டி கிராமத்தில் இன்று காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற உள்ளது.

தேனி வட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள், தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை (பட்டா மாறுதல், முதியோர் உதவித்தொகை கோருதல், புதிய குடும்ப அட்டை கோருதல், ஆதி திராவிடர் நலத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, விபத்து நிவாரணம், விவசாயத்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் இதர துறைகள்) ஜங்கால்பட்டி கிராமத்தில் நடைபெறும் மக்கள் தொடர்பு திட்ட முகாமில் நேரில் மனுவினைக் கொடுத்து பயன்பெற்றுக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161